(ஆ) தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு, விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவை முன் அளிக்கிறேன்.

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

THIRU P. SEENIVASAN : Sir, I rise to present the **Fourth** Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation.

(ஈ) பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவரவர்களே. பொதுக் கணக்காய்வுக் குழுவின் புதுப் பணிகள் குறித்த குழுவின் அறிக்கையை நான் பேரவை முன் சமர்ப்பிக்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.